S–1

# தமிழ் இணையக் கல்விக்கழகம்
# சென்னை – 600 025.

## இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)
## முதலாம் ஆண்டு – முதற் பருவம்

## ஜனவரி – பிப்ரவரி 2025
## P201 மொழிபெயர்ப்பியல்

**காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

### பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக. (15x1=15)**

1. மொழிபெயர்ப்பின் அடிப்படைத் தேவை எது?
2. அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட தமிழ் நூல் எது?
3. எம். ஜோகாய் என்பவர் எந்த மொழி அறிஞர்?
4. நைடாவின் மொழிபெயர்ப்புத் தேவை எத்தனை வகைப்படும்?
5. தருமொழி என்பது எது?
6. பகவத் கீதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட ஆண்டு எது?
7. 1861இல் வான சாஸ்திரம் என்னும் நூலைத் தழுவலாக வெளியிட்டவர் யார்?
8. சொல்லைக் குறிக்கத் தொல்காப்பியர் பயன்படுத்திய சொற்கள் யாவை?
9. செந்தமிழ் சேர்ந்த நிலங்கள் எத்தனை?
10. நடனமாடு என்பது எவ்வகை வினை?
11. சதுரகராதியின் ஆசிரியர் பெயர் என்ன?
12. தமிழகத்தில் ஆட்சி மொழியாகத் தமிழ் இருக்க வேண்டுமென்று சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு என்ன?
13. நான்காவது தமிழ் என்றழைக்கப்படுவது எது?
14. தமிழின் முதல் அறிவியல் நூல் எது?
15. ஜாமீன் என்பதன் தமிழ்ச்சொல் என்ன?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. மொழிபெயர்ப்பின் தேவை குறித்து எழுதுக.
2. மொழிபெயர்ப்புக் கொள்கை என்றால் என்ன?
3. தமிழின் தொன்மை குறித்து விவரிக்க.
4. அறிவியல் நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
5. சொல்லாக்கம் – குறிப்பு வரைக.
6. கத்தரிப்பாக்கம் பற்றி விவரி.
7. ஆட்சிமொழி குறித்து எழுதுக.
8. திரைப்பட மொழிபெயர்ப்பின் சிறப்புகளைக் கூறுக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) மொழிபெயர்ப்பின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) மொழிபெயர்ப்பின் கொள்கைகள் பற்றிய செய்திகளைத் தொகுத்துரைக்க.

2. (அ) சொல்லாக்கத்தின் வகைகள் குறித்துக் கட்டுரை வடிவில் விடை எழுதுக.

(அல்லது)

(ஆ) மொழிபெயர்ப்பின் சிக்கல்களைத் தொகுத்தெழுதுக.

3. (அ) அறிவியல் மொழிபெயர்ப்பின் தன்மைகளை ஆராய்க.

(அல்லது)

(ஆ) சட்ட மொழிபெயர்ப்பின் அவசியம் குறித்து கட்டுரை வடிவில் விடை எழுதுக.

***